

நெல்லை கிழக்கு மாவட்டம் திசையன்விளையில் உள்ள வி.எஸ்.ஆர்.விளையாட்டு மைதானத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு முன்னிட்டு அகில இந்திய அளவிலான மின்னொளி கபடி போட்டி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 3ம் நிகழ்வில் அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று விளையாட்டுப் போட்டியினை தொடங்கி வைத்தனர். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், அலெக்ஸ் அப்பாவு, நெல்லை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவரும் இராதாபுரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் வி.எஸ்.ஆர் ஜெகதீஸ், மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, ஒன்றியக் குழுத் தலைவர் சௌமியா ஜெகதீஸ் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மாணவர் அணி பொறுப்புக்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், ஆக. 14-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என்று வேளாண்மை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பின் படி, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இதில் ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர். துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர் / பழங்குடியினத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம். ஒரு துணை அமைப்பாளர் தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம். நியமிக்கப்படவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரி / டிப்ளமோ படிப்பை முடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக் கூடியவராகவோ இருத்தல் வேண்டும். இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் கடலூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்திலோ அல்லது முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ அல்லது வலைதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் வருகின்ற 18.08.2023 வெள்ளிக்கிழமை அன்று மாலைக்குள் மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும். அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் அந்தந்த மாவட்டத்திலேயே மாணவர் அணி நிர்வாகிகளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் பின்னர் தெரிவிக்கப்படும்.

குறிப்பு: ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால் அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்துவிவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்ப வேண்டும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/mwoy

மேலும் தொடர்புக்கு:

முகநூல் http://www.facebook.com/EzhilarasanCVMP

டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCVMP

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

### தி.மு.கழக சட்டத்துறை சார்பில் - கோவை வழக்கறிஞர் சங்கத்தில்

# இளம் வழக்கறிஞர்களை உறுப்பினர் சேர்த்தல்! வழக்கறிஞர் சேமநல நிதி!

## என்.ஆர்.இளங்கோ எம்.பி.வழங்குகிறார் !

கோவை, ஆக.14-

தி.மு.கழக சட்டத்துறை சார்பில் கோவையில் இளம் வழக்கறிஞர்களை சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்தல் மற்றும் வழக்கறிஞர் சேமநல நிதி அளித்திடும் விழா நடைபெறுகிறது. இதில் தி.மு. கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. பங்கேற்கிறார்.

தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக கோயம்புத்தூர் வழக்கறிஞர் சங்கத்தில் இதுவரை உறுப்பினராகாமல் உள்ள நூறு வழக்கறிஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உறுப்பினர் சேர்க்கை கட்டணம் மற்றும் அவர்களுக்கான சேம நல நிதி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியும் அவர்களுக்கான சட்ட வகுப்புகளை தொடங்கும் நிகழ்ச்சி (இன்று 14.8.2023) மாலை 3 மணி அளவில் அவிநாசி சாலை, திகிராண்ட் ரிஜென்ட் ஹோட்டல் கோயம்புத்தூரில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கழகத்தின் சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ எம் பி. கலந்துகொண்டு உறுப்பினர் சேர்க்கை கட்டணம் மற்றும் சேம நல நிதி ஆகியவற்றிற்கான காசோலையை கோயம்புத்தூர் வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகளிடம் வழங்க உள்ளார்.

மேலும் குற்றவியல் சட்டம் ஓர் அறிமுகம் என்னும் தலைப்பில் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்ட பயிற்சி வகுப்பும் எடுக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியை கோவை மாவட்ட முதன்மை அரசு வழக்கறிஞர் வ.அருள்குமார் ஒருங்கிணைத்துள்ளார்.

### ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் - மஸ்கட்டில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு புகழஞ்சலி!

## சிவக்குமார் - பாலமுருகன் - சிவசெந்தில் பங்கேற்பு!

மஸ்கட், ஆக. 14-

ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு புகழஞ்சலி நிகழ்ச்சி மஸ்கட் மாநகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் போது மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கலைஞரின் புகைப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. கலைஞரின் சாதனைகள், கவிதைகள், கட்டுரைகள், திரைத்துறையில் அவரது வசனங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள், இலக்கியம் சம்பந்தமான வரலாற்று சுவடுகளை அனைவரும் எடுத்துரைத்து அவருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

ஆண்டுகள் ஐந்து ஆயினும் அவர் விட்டுச் சென்ற காலச்சுவடு செய்திகள் அவர் நம்மிடையே வாழ்ந்து வருகிறார் என்ற உணர்வு தான் அனைவருடைய இதயத்திலும் மேலோங்கி நின்றது. கலைஞர் என்ற மந்திரச்சொல் நம் உள்ளத்தோடு நெருங்கி பயணித்துக் கொண்டே இருக்கிறது. தமிழ் சமூக வரலாற்றில் கலைஞரின் சகாப்தம் ஒரு தனி இடத்தை என்றென்றும் பெற்றிருக்கும் என்பதனை இங்கு பேசிய இளைஞர்கள் உரைகளில் காண முடிந்தது.

இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. செயலாளர் சிவக்குமார், தலைவர் பாலமுருகன், பொருளாளர் சிவ செந்தில், இளைஞர் அணி செயலாளர் திருமா வளவன், இளைஞர் அணி துணைச் செயலாளர் தங்கதுரை, பர்ஷாத், மாணிக்கவேல், செல்வின், ராஜன், அசோக், முருகன், மற்றும் பல்வேறு அணியை சார்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டு கலைஞருக்கு புகழஞ்சலியை செலுத்தினர்.

### மணிப்பூர் இனக்கலவரத்திற்கு ஒன்றிய அரசு தீர்வு காண வலியுறுத்தி

# கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணியினர் தர்ணா போராட்டம்!

## பெங்களூருவில் நடைபெற்றது!

பெங்களூரு, ஆக. 14-

மணிப்பூர் மாநிலத்தில் நடந்து வரும் இன கலவரத்தை தடுக்காமல் இருக்கும் ஒன்றிய அரசை கண்டித்து கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணியினர் பெங்களூருவில் தர்ணா போராட்டம் நடத்தினர்.

நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள மணிப்பூர் மாநிலத்தில் கடந்த மூன்று மாதங்களாக நடந்து வரும் இன கலவரத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் பல வழிகளில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது மிக பெரிய மனித உரிமை மீறல் செயலாக இருந்தும் மணிப்பூரில் அமைதி நிலை நாட்டும் முயற்சியை மணிப்பூர் மாநில பா.ஜ. அரசு மற்றும் ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ. அரசு மேற்கொள்ளாமல் அலட்சியம் காட்டி வருகிறது.

மணிப்பூர் மாநில இன கலவர விஷயத்தில் மவுனமாக இருக்கும் மணிப்பூர் மாநிலம் மற்றும் ஒன்றிய அரசுகளை கண்டித்தும் மணிப்பூர் மாநிலத்தில் அமைதி நிலைநாட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் ஏற்படுத்தி கொடுக்க வலியுறுத்தி கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணி சார்பில் நேற்று காலை 11 மணிக்கு பெங்களூரு சுதந்திர பூங்காவில் போராட்டம் நடத்தினர். மாநில தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் டி. சிவமலை தலைமையில் நடந்த போராட்டத்தில் கர்நாடக மாநில தி.மு.க. அவைத்தலைவர் மொ. பெரியசாமி, மாநில பொருளாளர் கே. தட்சணாமூர்த்தி, மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் என். விக்ரம், அ. லியோராஜன், மாநில தி.மு.க. முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் ஏ.டி.ஆனந்தராஜ், பெங்களூரு 96வது வட்ட செயலாளர் செ. தமிழ்ச்செல்வன், துணை செயலாளர் எஸ். ஏழுமலை, 95வது வார்டு நிர்வாகி லோகநாதன், தொ.மு.ச. நிர்வாகி சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூரில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு மற்றும் மாவட்ட ஆட்சியர் சாருஶ்ரீ உள்ளிட்ட அரசு அதிகாரிகள் முன்னிலை வகித்தனர்.

### முதல்வரின் துரித செயல்பாடுகளால்

# தொழில்முதலீடு செய்வோருக்கான பணிகளை விரைந்து முடிக்கும் நாடுகளில் தமிழ்நாடு முதலிடம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

திருவாரூர், ஆக. 14-

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது. சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் ,நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திராவிட நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இன்று அனைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் சீரிய திட்டங்களான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், இவாடகை குறித்தும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு, தீனதயாள் உபாத்யா கிராமின் கௌசல்யா திட்டம், குடிநீர் விநியோகம், (ஊரகம்) உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம், நமக்கு நாமே திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம் குறித்தும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசின் இசேவை மையம், பள்ளி கல்வித் துறையின் எண்ணும், எழுத்தும் இயக்கம், பள்ளி உட்கட்டமைப்பு, அரசு பள்ளிகளின் தேர்ச்சி விகிதம், சிறப்பு திட்ட செயலாக்களான நான் முதல்வன் திட்டம், முதல்வரின் சிறப்பு திட்டாக்கப் பணிகள் செயல்பாடுகள் குறித்தும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப்பணி கள், அங்கான்வாடிகள், புதுமை பெண் திட்டம் குறித்தும், மருத்துவத்துறையின் மக்களை தேடி மருத்துவம் குறித்தும், முதல்வ ரின் முகவரி திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தென் மாவட்டங்களில் அதிகமாக தொழில்பேட்டைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில்களை தொடங்கயுள்ளது. இதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கும். குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் படி விரைவில் தொடங்கப்படும். தென்மாவட்டங்களில் அதிக தொழில் முதலீடுகள் கொண்டுவரப்படும்.

வெளிநாடுகளில் இருந்து தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய வரும் நிறுவனங்கள் அதற்கான முதற்கட்ட அலுவல் பணிகள் முதல்வர் அவர்களின் துரித செயல்பாடுகளால் மற்ற நாடுகளைவிட மிக விரைவாக தமிழ்நாட்டில் நடைபெறுவதை கண்டு வியப்படைந்து நாங்கள் சொன்னதைவிட அதிக முதலீடுகளை தமிழ்நாட்டில் செய்திட விரும்புகிறோம் எனகூறுகின்றனர். இதுபோல விரைந்து செயல்படும் நாடாக தமிழ்நாடு இருப்பதாக குறிப்பிடுவது தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சிறப்பான ஆட்சிக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அதே போல் ஒடுக்கப்பட்ட மக்கள், விளிம்புநிலை மக்கள் , திருநங்கைகள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் தொழில்துறையில் வாய்ப்பளிக்கும் மாநிலமாக நமது தமிழ்நாடு விளங்குகிறது. இந்தியா முழுவதும் உள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிபவர்களில் நமது தமிழ்நாட்டை சேர்ந்தவர்களே அதிகம் என்கிற புள்ளிவிபரம் நமது தமிழ்நாட்டிற்கே பெருமையாகும் என தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நகர மன்ற தலைவர்கள் மன்னை.சோழராஜன், புவனபிரியா செந்தில், நகர மன்ற உறுப்பினர்கள் வாரை எஸ்.பிரகாஷ், டி. செந்தில் உள்ளிட்டவர்களும் அனைத்துதுறை உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நீட் தேர்வு குறித்து ஆளுநர் ரவி கருத்துக்கு அமைச்சராக உங்கள் பார்வையை சொல்லுங்கள் என்னும் பத்திரிக்கையாளரின் கேள்விக்கு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா பதில் ஒரு அமைச்சராக மட்டுமல்லாமல், நாட்டின் ஒரு பிரஜ்ஜையாக, திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஒரு தொண்டனாக, நீட்டின் கொடுமைகளை அறிந்த ஒருவனாக சொல்கிறேன், “முதல்வர் அவர்கள் எதிர் கட்சியாக இருந்த போதும் சரி, ஆட்சிப்பொறுப்பிற்கு வந்தபிறகும் சரி , நீட் தேர்வின் கொடுமைகளுக்கான சரியான காரணங்களை சொல்லி தெளிவாக எடுத்துரைத்த பிறகும் ஆளுநர் இப்படி ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறார் என்றால் , ஆளுநர் தனது எல்லா நடவடிக்கைகளிலும் அரசியல் செய்வதைப்போல ஏழை எளிய நடுத்தர மாணவர்களின் கல்வியிலும் , மருத்துவ கனவிலும் அரசியல் செய்வது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது” . இவ்வாறு அமைச்சர் பதில் அளித்தார்.

### தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 15.8.2023 செவ்வாய்க் கிழமை மாலை 4.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி “விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை” தமிழகம் முழுவதும் நடத்துவது - குறித்து

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 13.8.2023

ஏ.கே.எஸ்.விஜயன்
செயலாளர்
தி.மு.க. விவசாய அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னகேசவன்
### ஆகஸ்ட் 14 (1984)



தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.

“தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.